**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

| | | | |
|---|---|---|---|
| Calendar | : | **C.C.No. 194/2010** | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | | Prosecution : | **PW - 3** |
| | | Defence : | |
| | | Court : | |
| Name | : | கல்யாணராமன் | |
| Father / Husband Name | : | ராமன் | |
| Village | : | 4-410, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, பொழிச்சலூர், சென்னை - 74. | |
| Taluk | : | சென்னை | |
| Caste & Religion | : | இந்து | |
| Calling | : | வங்கி துணை மேலாளர் (ஓய்வு) | |
| Age | : | 67 /2023 | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.01.2023**
**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி எஸ். ஜெயந்தி, பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திரு எம். செழியன், தட்டச்சர்**

**<u>C.C.No. 194/2010 12.01.2023</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.20**

**முதல் விசாரணை:**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து தஞ்சாவூர் பஞ்சாப் நேஷனல் வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து கடந்த 2014ம் ஆண்டு விருப்ப ஓய்வு பெற்றுவிட்டேன். அ.சா.1 ஜெயேஷ் குமார் என்பவரை எனக்கு தெரியாது. கடந்த 2009 முதல் 2010ம் ஆண்டு வரை மேற்படி வங்கியில் துணை மேலாளராக பணிபுரிந்தபோது 6482 என்ற சேமிப்பு கணக்கின் வரவு செலவு ஸ்டேட்மெண்டை போலீசார் என்னிடம் கேட்டார்கள். வங்கி கணக்கின் பெயர் ஞாபகம் இல்லை. மேற்படி சேமிப்புக் கணக்கின் 2002ம் ஆண்டின் வங்கிக் கணக்கின்

**C.C.No. 194/2010 12.01.2023**

ஸ்டேட்மெண்டை கொடுத்துள்ளேன். அந்த கணக்கை யார் செயல்படுத்தி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் 15.07.2009 ம் தேதி தஞ்சாவூர் மாவட்ட குற்றப் பிரிவு துணை கண்காணிப்பாளர் அவர்கள் எங்கள் வங்கிக் கிளைக்கு அனுப்பிய அழைப்பாணை அதனை வங்கி மேலாளர் திரு முரளிதரன் அவர்கள் பெற்றுள்ளார். (**15.07.2009 ம் தேதியிட்ட அழைப்பாணை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 10.08.2009 ம் தேதியிட்ட மாவட்ட குற்றப் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் எங்கள் வங்கிக் கிளைக்கு அனுப்பிய கடிதத்தை நான் பெற்றேன். **(அந்த 10.08.2009 ம் தேதியிட்ட கடிதம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) சேமிப்பு கணக்கு 6842 ன் வங்கிக் கணக்கு பட்டியல் மாவட்ட குற்றப்பிரிவு துணை கண்காணிப்பாளர் அவர்கள் எங்கள் வங்கிக்கு அனுப்பியதை நான் பெற்றேன். **(அந்த வங்கிக்கணக்கு பட்டியல் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) 28.08.2009 ம் தேதி எங்கள் வங்கியில் இருந்து மாவட்ட குற்றப் பிரிவிற்கு அனுப்பப்பட்ட கடிதம். (**அந்த 28.08.2009 ம் தேதிய கடிதம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் மேற்படி சேமிப்பு கணக்கில் பணம் செலுத்தியது மற்றும் பணம் எடுத்தது தொடர்பான குறிப்புகள் உள்ளன. (**அந்த ஆவணம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) 28.08.2009 தேதியிட்ட 6842 சேமிப்புக் கணக்கின் 01.11.2002 முதல் 24.12.2002 வரையிலான வங்கி கணக்கு பட்டியல் வங்கியில் இருந்து காவல் துறைக்கு அனுப்பப்பட்டதாகும். (**அந்த 28.08.2009 தேதியிட்ட 6842 சேமிப்புக் கணக்கின் வங்கி கணக்கு பட்டியல் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) சேமிப்பு கணக்கு எண். 6842 ன் கணக்கு துவங்கியதற்கான விண்ணப்பத்தை நான் காவல் துறைக்கு அனுப்பியுள்ளேன். (**அந்த விண்ணப்பம் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

வங்கி கணக்கு துவங்கிய நிறுவனத்தின் 12.05.1988 ம் தேதியிட்ட குறிப்புகளும், சட்டத் திட்டங்களும் எங்கள் வங்கியில் இருந்து காவல் துறைக்கு அனுப்பட்டது. (**அந்த இரண்டு பக்க கடிதம் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) வங்கிக் கணக்கு துவங்கிய Indian Foundation of Alternative Medicine நிறுவனத்தின் பொதுச் செயலாளரின் மாதிரி கையொப்பங்கள் கொண்ட

**C.C.No. 194/2010 12.01.2023**

அட்டை எங்கள் வங்கியில் இருந்து காவல் துறைக்கு அனுப்பட்டது. **(அந்த அட்டை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வங்கிக் கணக்கில் 6842 ன் பணம் செலுத்தியதற்கான எட்டு டெப்பாசிட் சலான்கள் எங்கள் வங்கியில் இருந்து காவல் துறைக்கு அனுப்பட்டது. **(அந்த எட்டு டெப்பாசிட் சலான்கள் அ.சா.ஆ 13 (8 வரிசைகள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வங்கிக் கணக்கில் 6842 ன் பணம் எடுத்ததற்கான ஒன்பது பணம் பெறும் சிலிப்புகள் எங்கள் வங்கியில் இருந்து காவல் துறைக்கு அனுப்பட்டது. **(அந்த ஒன்பது பணம் பெறும் சிலிப்புகள் அ.சா.ஆ 14 (9 வரிசைகள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வங்கி கணக்கு எண். 6842 ன் 16.09.2003 முதல் 16.09.2005 வரை வங்கியில் இருந்து கொடுக்கப்பட்ட வட்டித் தொகை மற்றும் வங்கி பெற்ற சேவைக் கட்டணங்கள் குறித்த பட்டியல் எங்கள் வங்கியில் இருந்து காவல் துறைக்கு அனுப்பட்டது. **(அந்த பட்டியல் அ.சா.ஆ. 15 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வங்கிக் கணக்கில் இருந்து நிறுவனம் சார்பாக யார் பணம் எடுத்துச் செல்வார்கள் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

வங்கி கணக்கு எண். 6842 யார் பெயரில் தொடங்கப்பட்டது, யார் நிர்வகிக்கிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்கண்ட வங்கிக் கணக்கில் பணம் எடுத்தது மற்றும் செலுத்தியது தொடர்பாக 2003 முதல் 2005 வரையிலான காலத்தில் நான் அந்த அலுவலகத்தில் பணியில் இல்லை, யார் பணியில் இருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரிதான். மேற்கண்ட ஆவணங்கள் குறித்து பணியில் இருந்த குறிப்பிட்ட மேலாளரை விசாரித்தால்தான் விபரம் தெரியும் என்றால் சரிதான். அ.சா.ஆ.13 ல் ரூபாய் ஐம்பதாயிரம் வரைவு காசோலை மூலமாக டெப்பாசிட் செய்ததாக எந்த சலானும் இல்லை . அ.சா.ஆ.13 ல் உள்ள 18.11.2002 ம் தேதியில் ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் இந்தியன் வங்கியின் காசோலை மூலமாக டெப்பாசிட் செய்த சலான் உள்ளது. அ.சா.ஆ.13 மற்றும் அ.சா.ஆ.14 ல் ஐம்பதாயிரம் ரூபாய் பெறப்பட்டதற்கான சிலீப்

எதுவும் இல்லை. அ.சா.ஆ.8 வங்கிக் கணக்கு பட்டியலில் ரூபாய் ஐம்பதாயிரம் டெப்பாசிட் செய்தது மற்றும் பெறப்பட்டதற்கான குறிப்பு எதுவும் இல்லை. அ.சா.ஆ.12 மாதிரி கையொப்பங்கள் என்னுடைய பணிகாலத்தில் பெறப்பட்டவை அல்ல, யார் அப்போது பணியில் இருந்தார்கள் என்ற விபரம் எனக்கு ஞாபகம் இல்லை. அ.சா.ஆ.10, 11, 12 ஆகியவைகள் எங்கள் வங்கியில் பெறப்பட்ட காலத்தில் நான் அலுவலகத்தில் பணியில் இல்லை. நான் வங்கி கணக்கு எண் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை, நான் ஆவணத்தை பார்த்தால் சொல்ல இயலும். நான் முதல் விசாரணையில் வங்கி கணக்கு எண். 6482 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை, நான் ஆவணத்தை பார்த்தால் சொல்ல இயலும். மேற்கண்ட ஆவணங்களின் காலகட்டத்தில் நான் மேற்படி வங்கியில் பணியில் இல்லாததால் அது குறித்து நான் சாட்சியம் சொல்ல இயலாது என்றால் சரியல்ல. நான் போலீசார் கேட்டதற்காக சம்மந்தப்பட்ட ஆவணங்களை ஆஜர் செய்தேன் என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.